**செய்தி வெளியீடு எண்: 281** **நாள்: 21.04.2020**

# செய்தி வெளியீடு

## கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை அளிக்கப்பட்டுள்ள நன்கொடையாளர்களின் விவரங்கள் – 21.4.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க பல்வேறு தீவிர நோய்தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கென முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து **13.4.2020 அன்று வரை, மொத்தம் 134 கோடியே 63 லட்சத்து 54ஆயிரத்து 364 ரூபாய் வரப்பெற்றுள்ளது.**

இதன் தொடர்ச்சியாக, 14.4.2020 முதல் 20.4.2020 வரை ஏழு நாட்களில் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மனமுவந்து நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்:

- **ஸ்டெர்லைட் காப்பர்– வேதாந்தா நிறுவனம், தூத்துக்குடி** 5 கோடி ரூபாய்
- **சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனம்** 3 கோடி ரூபாய்
- **ஐ.டி.சி எஜுகேஷன்** 2 கோடி ரூபாய்
- **தி சன்மார் குரூப்** 1 கோடி ரூபாய்
- **ஆச்சி மசாலா புட்ஸ் நிறுவனம்** 1 கோடியே 10 லட்சம் ரூபாய்
- **தமிழ்நாடு அரசு E-Payments** 97 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்
- **தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்** 77 லட்சத்து 30 ஆயிரத்து 543 ரூபாய்
- **இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை** 64 லட்சத்து 74 ஆயிரத்து 752 ரூபாய்
- **கிரிஸ்டி பிரைட்கிராம் நிறுவனம்** 50 லட்சம் ரூபாய்
- **தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம், மதுரை** 31 லட்சம் ரூபாய்

- **தி சுப்ரீம் இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட் நிறுவனம்** 31 லட்சம் ரூபாய்
- **தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்** 26 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய்
- **திரு. மனோஜ்குமார் சொந்தாலியா, ஸ்ரீவல்லபாச்சார்யா வித்யா சபா சார்பாக** 25 லட்சம் ரூபாய்
- O.C.F, **ஆவடி** 22 லட்சத்து 43 ஆயிரத்து 772 ரூபாய்
- **ஜெயவர்மா டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்** 15 லட்சம் ரூபாய்
- **நியூ லைப் அசெம்பிளி ஆப் காட்** 10 லட்சம் ரூபாய்
- **திரு. எஸ். ராஜரத்தினம்** 10 லட்சம் ரூபாய்

மேற்கண்ட ஏழு நாட்களில் மட்டும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து 26 கோடியே 30 இலட்சத்து 20 ஆயிரத்து 208 ரூபாய் வரப்பெற்றுள்ளது. **இதுவரை பெறப்பட்ட மொத்த தொகை 160 கோடியே 93 லட்சத்து 74 ஆயிரத்து 572 ரூபாய் ஆகும்.**

**இதுவரை நிவாரணம் அளித்த நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும், தொடர்ந்து அரசுக்கு ஆதரவு அளித்து வரும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.**

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**